**පරිසරය, කෘෂිකර්මය සහ සම්පත් තිරසාරත්වය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**

**වෙත යොමු කරන ලද**

**ජාතික පාරිසරික (සංශෝධන) පනත් කෙටුම්පත**

**සම්බන්ධයෙන්**

**පරිසරය, කෘෂිකර්මය සහ සම්පත් තිරසාරත්වය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව**

**පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ**

**පරිසරය, කෘෂිකර්මය සහ සම්පත් තිරසාරත්වය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**

**ගරු හෙක්ටර් අප්පුහාමි මහතා, පා.ම. විසිනි**

**2026 ජූනි මස 12 වැනි සිකුරාදා**

---------------------------------------------------------------

**சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார்**
**மேற்பார்வைக் குழுவிற்கு**
**ஆற்றுப்படுத்தப்பட்ட**
**தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம்**
**மீதான**
**சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார்**
**மேற்பார்வைக் குழுவின் அறிக்கையானது**
**சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார்**
**மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்**
**பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்களால்**
**2026 யூன் மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில்**
**சமர்ப்பிக்கப்பட்டது.**

---------------------------------------------------------------

**Report of the**

**Sectoral Oversight Committee on Environment, Agriculture and Resource Sustainability**
**on**

**National Environmental (Amendment) Bill**

**referred to**

**Sectoral Oversight Committee on Environment, Agriculture and Resource Sustainability**

**Presented to Parliament by**

**Hon. Hector Appuhamy, M.P.**

**Chair of the**

**Sectoral Oversight Committee on Environment, Agriculture and Resource Sustainability on**

**Friday 12 June 2026**

## குழுவின் அறிக்கை

2026 யூன் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் பின்வரும் சட்டமூலம் பரிசீலிக்கப்பட்டது.

- தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம்

  (2026 மே மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

**சமுகமளித்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.(தவிசாளர்)

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன், பா.உ.

கௌரவ கிங்ஸ் நெல்சன், பா.உ.

கௌரவ உபுல் கித்சிறி, பா.உ.

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி, பா.உ.

கௌரவ சுசந்த குமார நவரத்ன, பா.உ.

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து, பா.உ.

கௌரவ சுதத் பலகல்ல, பா.உ.

கௌரவ கிட்ணன் செல்வராஜ், பா.உ.

கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத், பா.உ.

**சமுகமளித்த குழுவின் அங்கத்துவர் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ அஜித் கிஹான், பா.உ.

**குழுவின் செயலாளர்**

திரு. கலன்சூரிய பிரியந்த சந்தன, உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**பங்குபற்றிய உத்தியோகத்தர்கள்**

**சுற்றாடல் அமைச்சு**

திரு. ஆர்.பி.எஸ்.யு. ஜயரத்ன – மேலதிக செயலாளர்(நிர்வாகம்)

திருமதி. ஆர்.எச்.எம்.பி. அபேகோன் – மேலதிக செயலாளர் (சுற்றாடல் கொள்கை திட்டமிடல்)

செல்வி. தினேஷிகா சி.ஜயவர்தன (சட்ட அலுவலர்)

திருமதி. கிருஷாந்தி ஹென்நாயக்க - உதவிப் பணிப்பாளர் – சட்டம்

**மத்திய சுற்றாடல் அதிகார சபை**

பேராசிரியர். திலக் ஹேவாவசம் – தவிசாளர்

திரு. ஆர். எஸ். பி. கபில ராஜபக்ஷ - பணிப்பாளர் நாயகம்

திருமதி. ஜி.ஆர். டி.என். அத்தநாயக்க - பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திரு. எச்.எல். கமல் பிரியந்த – பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திரு. எஸ.எம். ஏ சேனநாயக்க - பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திருமதி. எஸ்.பி. பெரியப்பெரும – பிரதிப் பணிப்பாளர் நாயகம்

**சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம்**

கலாநிதி (திருமதி) அவந்தி பெரேரா பிரதி சொலிற்றர் ஜெனரல்

**<u>சட்ட வரைஞர் திணைக்களம்</u>**
திருமதி. எம். பி. குலரத்ன – உதவி சட்ட வரைஞர்.

**<u>அறிமுகம்</u>**
மத்திய சுற்றாடல் அதிகார சபையொன்றைத் தாபிப்பதற்கும் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் தொடர்பிலான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் சூழலைப் பாதுகாப்பதற்கும் முகாமை செய்வதற்குமான ஏற்பாட்டைச் செய்வதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான, அங்கீகரிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 56 மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலமாகும்.

**<u>குழுவின் அவதானிப்புகள்</u>**

1. மத்திய சுற்றாடல் அதிகாரசபை இலங்கையில் பாரிய பணிப்பொறுப்புகளை நிறைவேற்றி வருகின்ற ஒரு நிறுவனம் என்பதால், தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பல்வேறு துறைகளில் நிபுணத்துவ அறிவுகொண்ட நபர்கள் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை கவனத்தில்கொண்டு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கையை 03 இலிருந்து 05ஆக அதிகரிக்க வேண்டும் எனவும்,

2. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு முறைவழி கையாளப்பட்டுள்ளபோதும், அதற்கு ஏற்புடைய சட்டரீதியான ஏற்பாடுகள் இத்திருத்தத்தின் மூலமே கிடைக்கின்றன எனவும்,

3. மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு இற்றைவரை சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விதப்புரைகளை வழங்கும் அதிகாரம் மாத்திரமே இருந்ததுடன், இத்திருத்தத்தின் மூலம் கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் கிடைக்கின்றது எனவும்,

4. பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால் பிறப்பிக்கப்படுகின்ற கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு இற்றைவரை உற்பத்தியாளரைச் சார்ந்திருக்கவில்லை என்பதுடன், அந்த விடயத்தில் பொறுப்பினை ஒப்படைக்கும் பொறிமுறையை முறைப்படுத்தும் அதிகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்டுள்ளன எனவும்,

5. தமது ஆளுகைப் பிரதேசங்களில் காணப்படுகின்ற சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளை ஒழுங்குறுத்துவதற்கு உள்ளூராட்சி அதிகார சபைகள் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்களிலும், கட்டளைகளைப் பிறப்பித்து அவை தவற விடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களிலும் வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அளிக்கப்பட்டுள்ளது எனவும்,

6. கைத்தொழில் ஒன்றை ஆரம்பித்த பின்னர் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சூழல் பாதுகாப்பு உரிமத்திற்குப் பதிலாக, கைத்தொழில் ஒன்றை ஆரம்பிக்குமுன்னர் குறித்த வளவு இசைவுச் சான்றிதழுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்கான திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும்,

7. கைத்தொழில்களுக்கான சூழல் பாதுகாப்பு உரிமத்தை வழங்குவதற்கும், அத்தகைய உரிமங்களை இடைநிறுத்துவதற்குமான அதிகாரத்தை மத்திய சுற்றாடல் அதிகாரசபை கொண்டிருக்க வேண்டும் எனவும்,

8. இரசாயனப் பொருட்கள் மற்றும் ஊறு விளைவிக்கும் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான புதிய சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும், மற்றும் அதன் நிமித்தம் தாபிக்கப்பட உள்ள நிபுணத்துவ தொழில்நுட்ப குழு காலத்திற்கு மிகவும் பொருத்தமானது எனவும்,

9. மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எழுத்து மூலமான அறிக்கைகளைக் கோரும் அதிகாரமும் சுற்றாடல் பாதுகாப்பு இடப்பரப்பு ஒன்றில் காணப்படுகின்ற அனுமதியற்ற குடியிருப்புகளை உடைத்து அப்புறப்படுத்தும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளன எனவும்,

அதன்படி, குழுவானது தேசிய சூழல் (திருத்தச்) சட்ட மூலத்தை, அமைச்சினால் குழு நிலையின்போது முன்னிலைப்படுத்தப்பட உள்ள திருத்தங்களுக்காக சட்டத்துறை தலைமை அதிபதியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக அங்கீகரிக்கின்றது.

**குழுவின் தீர்மானம்**

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் குழுவில் பரிசீலிக்கப்பட்டு, அதற்கு இணங்கியதோடு, அது தொடர்பில் தயாரிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை குழுவின் கௌரவ தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்களால் 2026 யூன் மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்தது.